கடந்த ஆண்டில் மட்டும் அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊரக, உள்ளாட்சி அமைப்புகள்மூலம் கிட்டத்தட்ட 88,247 பணிகள் எடுக்கப்பட்டு, கடந்த மூன்று ஆண்டுகளில் 6,255.34 கோடி ரூபாய் செலவில் சிறப்பான முறையில் பணிகள் முடிக்கப்பட்டு, நடைமுறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின்போது எடுக்கப்பட்ட திட்டங்களுக்கான அரசாணைகள் போடப்பட்ட நிலையில், விட்டுவிட்டு சென்றுவிட்டனர். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அந்தத் திட்டங்களெல்லாம் எடுக்கப்பட்டு, இப்பொழுது முடிக்கப்பட்டு வருகின்றன. மக்கள் பயன்பாட்டுக்கு வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை கண்டிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 235, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

235—

கால்நடை மருத்துவமனை

***18565—திரு. மு. ராஜநாயகம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, பெருமருதூர் கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள

2014 ஜூலை 23]

பெருமருதூர் கிராமம் மற்றும் அந்தக் கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 5,000–க்கும் அதிகமாக உள்ளதால், மேற்படி கிராமத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியோடு, கால்நடை மருந்தகம் அமைக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.*

திரு. மு. ராஜநாயகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்புடைமை, அறிவுடைமை, துணிவுடைமை, வன்மை, உண்மை, திண்மை, வானம், தவம், முயற்சி, எதிரிகளே அஞ்சும் பேராண்மை; இவை அனைத்திற்கும் இலக்கணமாய், அகிலம் புகழ வாழும் அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக முதல்வர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமைக்குரிய புராதன நகரங்களுக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில், பல கோடி நிதியை வாரி வழங்கிய வாழும் வள்ளல், எங்களை வாழ வைக்கும் எங்கள் குலதெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களே, அறந்தாங்கி தொகுதி, திருப்புனவாசலுக்கு ரூ.1 கோடி நிதி வழங்கி, நீதி நெறி தவறாமல் ஆட்சி செய்யும் அன்னைக்கு ஆயிரம் கோடி நன்றி மலர்களை அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஒன்றியத்தில் இருக்கும் பெருமருதூர் கிராமத்திற்குக் கால்நடை மருத்துவமனை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று அமைத்துத் தரப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தாயுள்ளத்துடனும், கருணையுள்ளத்துடனும் அனுமதி வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் என் சார்பாகவும், கால்நடைகளை வைத்து விவசாயம் செய்துவரும் அறந்தாங்கி தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானு கோடி நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 236, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*